[3rd November 1958

The Hon. Sri P. KAKKAN : அதற்குக் காரணம் அரசாங்கத்தின் அலட்சியம் அல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஜில்லாக் கலெக்டர்களிடமிருந்து அரசாங்கத்திற்கு விவரங்கள் வந்து சேர்வது தாமதமாவதே அதற்குக் காரணம். விவரங்களைத் துரிதமாக அனுப்பும்படி கலெக்டர்களுக்குச் சொல்லியிருக்கிறோம்.

Production of cycles and cycle accessories

*817 *Q.*—Sri P. G. MANICKAM : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) சைக்கிள்களையும் சைக்கிள் சாமான்களையும் உற்பத்தி செய்யக் கூடிய கவர்ன்மெண்டால் நடத்தப்படும் நிலையங்களும், தனிப்பட்டவர்களால் நடத்தப்படும் நிலையங்களும் எந்தெந்த இடங்களிலே இருக்கின்றன ?

(ஆ) இந்நிலையங்கள் மூலமாக எத்தனை சைக்கிள்களும், எத்தனை ரூபாய்கள் மதிப்புள்ள சைக்கிள் சாமான்களும் ஒவ்வொரு ஆண்டிலும் உற்பத்தி செய்யப்பட்டன ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) Government Units—

(1) General Purposes Engineering Workshop at Rajapalayam.

Private Units.

(1) The T.I. Cycles of India Limited, Madras.
(2) The Wheel and Rim Company of India Limited, Madras.
(3) The Rapid Industries Limited.
(4) The Varun Industrial Corporation, Limited, Guindy.

(*b*)

(1) General Purposes Engineering Workshop, Rajapalayam.	37 Dozens of cycle parts.
(2) The T. I. Cycles of India Limited, Madras.	200,108 cycles during 1957—58.
(3) The Wheel and Rim Company of India, Limited, Madras.	509,288 rims during 1957—58.
(4) The Rapid Industries, Madras.	1,316 cycles and 2,832 cycle parts from January 1958.
(5) The Varun Industrial Corporation, Limited.	Started only very recently.

Factory Inspectors and Labour Officers Conference

*818 *Q.*—Sri K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Home be pleased to state the recommendations made by the Factory Inspectors and Labour Officers' Conference held recently?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : There has been no conference of the Inspectors of Factories and the Labour Officers recently. A conferencnce was held in May 1956 to enable the officers to come together to discuss common problems arising in the day-to-day administration of labour laws. A statement [a] containing the particulars of the recommendations made at the conference and the action taken thereon is placed on the table of the House.

---

[a] Printed as Appendix VIII at pages 481–484 infra.

3rd November 1958]

SRI K. SATTANATHA KARAYALAR : சர்க்கார் கூட்டிய இந்த மகாநாட்டில் மிக முக்கியமான ஒரு சிபார்சு, தொழில் தர்க்கம் ஏற்படும் போது முதலாளியும், தொழிலாளியும், சர்க்கார் லேபர் ஆபீசர் அழைத்தால் வந்து பங்கு எடுத்துக் கொள்ளவேண்டுமென்பது. பல முதலாளிகள் அதை உதாசீனப்படுத்துவதின் காரணத்தால் இந்த சிபார்சு செய்யப்பட்டது. அப்படியிருந்தும் அவர்களை ஏன் கட்டாயப் படுத்த வேண்டாமென்று சர்க்கார் உத்தரவு பிறப்பித்தது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கட்டாயப்படுத்துவது என்றால் அதற்கு ஒரு சட்டம் செய்யவேண்டும். அதற்கு நிமித்தம் இல்லாமலேயே இதைக் கவனித்துக் கொள்ளலாம் என்ற அபிப்பிராயத்தில்தான் அரசாங்கம் அப்படிச் செய்தது.

SRI S. LAZAR : சில முக்கியமான சிபார்சுகளைப் பொறுத்துச் சொல்கிறபோது இது சம்பந்தமாகச் சட்டம் செய்ய வேண்டுமென்று அறிக்கையிலும் குறிப்பிடப் பட்டிருக்கிறது. இப்பொழுது அமைச்சர் அவர்களும் சொன்னார்கள். இண்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்ட் போன்ற முக்கியமான சட்டங்களை, இச்சிபார்சுகளின் அடிப்படையில் திருத்துவதற்கு நமது அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு சிபார்சு செய்திருக்கிறதா ? அப்படியிருந்தால் எப்பொழுது இந்தச் சிபார்சு நடைமுறைக்கு வரும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இண்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்டின் பல பிரிவுகளை திருத்த வேண்டுமென்று மத்திய அரசாங்கத்திற்கே யோசனை இருக்கிறது. சமீபத்தில் நடந்த ஸ்டாண்ட்டிங் கமிட்டியில் தொழில் அதிபர்களையும், தொழிலாளி பிரதிநிதிகளையும் சேர்த்து இதுமாதிரிக் கலந்து பேசினார்கள். ராஜ்ய அரசாங்கங்களின் அபிப்பிராயங்களையும் பெற்றிருக்கிறார்கள். இந்த சர்க்காரும் அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறது. இதை எல்லாம் வைத்து மறுபடியும் டிஸம்பர் மாதத்தில் இதைப் பற்றிப் பரிசீலனை செய்து இந்தத் திருத்தத்தை மத்திய அரசாங்கமே ஏற்று நடத்துவது என்பதுதான் அபிப்பிராயம்.

Selection Committee for Elementary Grade Training Schools

*819 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) ஆரம்ப ஆசிரியர்கள் பயிற்சிப் பள்ளிகளுக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் பொறுக்கு குழுவிற்கு (Selection Committee) நியமிக்கப்படும் உறுப்பினர்கள் எந்த அடிப்படையில் நியமிக்கப்படுகிறார்கள் ?

(ஆ) எந்த அடிப்படையில் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Non-official members of the Committees for the selection of candidates for admission to basic training schools are selected on the basis of their interest in basic education. There is no selection committee of non-official members for non-basic training schools.

(*b*) Copies of proceedings of the Director of Public Instruction showing the basis of selection of candidates for admission to Basic Training Schools are placed on the table of the House.

SRI S. M. ANNAMALAI : ஸ்ரீ விநயகம் அவர்கள் கேட்ட கேள்விக்கு ஒரு அறிக்கை வைத்திருக்கிறது. அதைப் பார்க்கிறபோது அந்தக் குழுவில் உள்ள உறுப்பினர்கள் அனைத்தும் காங்கிரஸ் கட்சிக்காரர்களாக இருக்கிறார்கள். தவிர மாற்றுக் கட்சியில் உள்ள தோழர் ஒருவருக்குக் கூட அதில் இடமில்லை. காங்கிரஸ் கட்சிக்காரர்கள் மட்டுந்தான் அந்தக் குழுவில் இருக்க வேண்டுமென்று சர்க்காரின் கொள்கையா ?

* Printed as Appendix IX on pages 485–488 infra.